**செய்தி வெளியீடு எண் : 406** **நாள் : 01.03.2023**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாகவும், சமூக வலைதளங்கள் வாயிலாகவும், கடிதம் வாயிலாகவும் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்த தெலுங்கானா ஆளுநர், மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 70-வது பிறந்தநாளையொட்டி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் திரு. சீத்தாராம் யெச்சூரி, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு.ஜி.கே. மணி, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் திரு. கமலஹாசன், சூப்பர் ஸ்டார் நடிகர் திரு. ரஜினிகாந்த் ஆகியோர் தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு, பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 70-வது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு தெலுங்கானா மாநில ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், மாண்புமிகு ஆந்திரா மாநில முதலமைச்சர் திரு. ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டி, மாண்புமிகு கேரளா மாநில கல்வி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. வி. சிவன்குட்டி, தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. விஜயகாந்த், பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான், நடிகை காயத்ரி ரகுராம் ஆகியோர் சமூக வலைதளங்கள் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 70-வது பிறந்தநாளையொட்டி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் கடிதம் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in